**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 584 of 2025

Depositions of PW -5 witness for ________ Prosecution / Defence / Court

Name : கார்த்திகேயன்

Father's Name : பழனியப்பன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of April** 2026.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கருமத்தம்பட்டி காடுவெட்டி பாளையத்தில் குடியிருந்து கொண்டு ஆட்டோ ஓட்டி வருகிறேன். சண்முகப்பிரியா அவர்களை எனக்கு தெரியும். சண்முக பிரியாவின் கணவர் முத்துக்குமார் அவர்களை எனக்கு தெரியும், அவர் என்னுடைய நண்பர். கடந்த 11.09.2024 ஆம் தேதி இரவு சுமார் 10:15 மணியளவில் நான் கருமத்தம்பட்டியில் இருந்து என்னுடைய வீட்டிற்கு செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் நான் பின்னால் வந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்பாக ஸ்டாலின் ராஜ் அவருடைய இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அவர்களுக்கு முன்பாக முத்துக்குமார் அவர்கள் சென்று கொண்டிருந்தார் Mars கம்பெனி அருகே சென்று கொண்டிருந்த பொழுது அன்னூரில் இருந்து கருமத்தம்பட்டி வழியாக வேகமாக வந்து முத்துக்குமார் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது. நானும் என்னுடைய நண்பர் ஸ்டாலின்ராஜ் இருவரும்

இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு முத்துக்குமார் அவர்களை பார்த்தபொழுது அவரது தலை மற்றும் உடலில் பலத்த அடிபட்டு இருந்தது. உடனடியாக விபத்து குறித்து அவருடைய வீட்டிற்கு தகவல் சொன்னோம்.

2. பின்னர் சம்பவ இடத்திலிருந்து முத்துக்குமார் அவர்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக அனுமதித்தோம். சிகிச்சையில் இருந்த முத்துக்குமார் சிகிச்சை பலனின்றி மறுநாள் இறந்துவிட்டார். பின்னர் இது சம்பந்தமாக முத்துக்குமார் அவர்களின் மனைவி சண்முகப்பிரியா அவர்கள் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். லாரியின் பதிவு எண் TN 41 AF 4942 ஆகும். சம்பவத்தின் பொழுது லாரியின் ஓட்டுநரை நான் பார்த்தேன், அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும் (எதிரி இன்று ஆஜர் இல்லை, எதிரி தரப்பில் வழக்கறிஞர் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டுள்ளது). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் போலீசார் விசாரணையின் பொழுது சொன்ன விபரத்தை தான் தற்பொழுது நீதிமன்ற முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கருமத்தம்பட்டியில் இருந்து நான், ஸ்டாலின் ராஜ் மற்றும் முத்துக்குமார் மூன்று பேரும் ஒன்றாக கிளம்பினோம் என்றால் சரியல்ல, நானும் ஸ்டாலின் ராஜும் மட்டும் ஒன்றாக வெவ்வேறு வாகனங்களில் கிளம்பினோம். முத்துக்குமார் எப்பொழுது கிளம்பினார் என எங்களுக்கு தெரியாது. நாங்கள் சென்ற பொழுது கிட்டம்பாளையத்தில் அவர் டிபன் வாங்கிக் கொண்டிருந்தார். முத்துக்குமார் குழந்தைகளுக்கு டிபன் வாங்கி கொடுக்க வேண்டும் என கிளம்பினார். அவருக்கு சுமார் 10 முதல் 30 வினாடிக்குள் நாங்களும் கிளம்பினோம். போலீசார் என்னை விசாரித்த பொழுது நானும் ஸ்டாலின் ராஜும் தனித்தனியாக இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்ற விபரத்தை சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளேன், ஆனால் வாகனத்தின் பதிவு எண் குறிப்பாக சொல்லவில்லை.

2. மேலும் போலீசார் என்னை விசாரித்த பொழுது எனக்கும் முத்துக்குமாருக்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என குறிப்பாக எத்தனை மீட்டர் என சொல்லவில்லை என்றால் சரிதான். முத்துக்குமார் ஓட்டி சென்ற வாகனம் பல்சர் வாகனம், பதிவு செய்யப்படாத புதிய வாகனம். முத்துக்குமார் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். யார் சொல்லி எதிரியை தெரிந்து கொண்டேன் என்றால், எதிரி லாரியில் இருந்து

இறங்கிய பொழுது நான் பார்த்தேன். எதிரியின் முகவரி மற்றும் பெயர் போலீசார் சொல்லி தெரிந்து கொண்டேனா என்றால் போலீசார் சொல்லித்தான் தெரிந்து கொண்டேன். எதிரியை போலீசார் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்த பொழுது தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். என்னைத் தவிர சம்பவ இடத்தில் எத்தனை நபர் இருந்திருப்பார்கள் என்றால், நிறைய நபர்கள் வந்துவிட்டார்கள் ஆனால் எத்தனை நபர்கள் என நான் குறிப்பாக பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் நல்ல வெளிச்சமாக இருந்தது என்றால் சரியல்ல, அளவான வெளிச்சம் தான் இருந்தது.

3. எதிரியின் உயரம் மற்றும் நிறம் குறித்து போலீசார் என்னை விசாரித்த பொழுது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்ன நிற உடை அணிந்து இருந்தார்கள் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். முத்துக்குமார் இறந்தது சம்பந்தமாக இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் விபத்து சம்பவம் நடைபெறவில்லை என்றும், மேலும் நான் சம்பவ இடத்தில் சம்பவத்தின் பொழுது இல்லை என்றால் சரியல்ல. சம்பவத்தில் இறந்த முத்துக்குமார் என்னுடைய நண்பர் என்பதால் அவர் மனைவி கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாகவும், அவர்கள் இழப்பீடு பெற வேண்டியும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் சம்பவ விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**